**PROCEEDINGS OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY (SEIAA-TN) FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT TMT. T. JAYAPRABA ORDINARY EARTH QUARRY IN THE SURVEY NUMBERS: 101/2, OVER AN EXTENT OF 1.76.0 HA, KONDALANKUPPAM VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Ordinary Earth Quarry with an extent of 1.76.0 Hectares by the unit Tmt. T. Jayapraba Ordinary Earth Quarry at S.F.No. 101/2 of Kondalankuppam Village, Vanur Taluk, Villupuram District.

**Venue:** M/s. Dhanalakshmi Mahal, SH- 136, Karasanur Village, Vanur Taluk, Villupuram District – 604 304

**Date & Time:** 21.07.2026 – 11:30 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru.K.Ekambaram | Revenue Divisional officer, Villupuram |
| 2. | Er.R.Ranga Raj | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 3. | Er.S.Elayaraja | Assistant Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 4. | Er. M.Sangavi | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 5. | Er. V.Kathirvel | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 6. | Thiru.N.Dinesh Babu | Assistant,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram. |

| | | |
|---|---|---|
| 7. | Thiru.M.Sadagopan | Typist,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 8. | Tmt.T.Jayapraba | The Proprietrix, Tmt. T. Jayapraba Ordinary Earth Quarry in the Survey Numbers: 101/2, over an extent of 1.76.0 Ha, Kondalankuppam Village, Vanur Taluk, Villupuram District |
| 9. | Thiru.P,Gopinath | Project Consultant.<br>M/s. Ecotech Labs Private Limited, Chennai. |
| 10. | Public and Environmentalists | 117 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Revenue Divisional officer, Villupuram, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of Tmt. T. Jayapraba Ordinary Earth Quarry in the Survey Numbers: 101/2, over an extent of 1.76.0 Ha, Kondalankuppam Village, Vanur Taluk, Villupuram District has proposed to Mining project of Ordinary Earth Quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 12.12.2025. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 21.07.2026, was published in *The "New Indian Express"* and "*Daily Thanthi*" on 10.06.2026 with the approval of the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of M/s. Taamaesek Engineering Consortium Rough Stone and Gravel Quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA

suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Revenue Divisional officer, Villupuram requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent EIA Co-ordinator will explain about the project.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Tmt. T. Jayapraba, Proprietrix of the Tmt. T. Jayapraba Ordinary Earth Quarry Explained about the project and he welcomed the Revenue Divisional officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Revenue Divisional officer, Villupuram has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

**1.Thiru S. Sourirajan, Kadagampattu Village**

- He stated that he had no objection to the proposed project and expressed his support for the project.

**2. Thiru Karinathaboopathi, Kondalangkuppam Village**

- He stated that he had no objection to the proposed project and expressed his support for the project.

**3. Thiru Senthil Kumar, Sandhai Pudhukuppam Village**

- He stated that he had no objection to the proposed project and expressed his support for the project.

**4. Thiru Parthiban, Thollamur Village**

- He stated that he was not aware of the public hearing being conducted for the proposed quarry project. He further mentioned that when he asked the women from Thollamur Village, who had attended the meeting, where they were going, they themselves were unaware of the purpose of their participation.
- He stated that no social activists or educated youth from Thollamur Village had participated in the meeting.
- He pointed out that nearly 1,000 Lorries pass through Thollamur Village every day, but no effective pollution control measures have been implemented.
- He stated that although public hearings are conducted for several quarry projects and the villagers regularly express their concerns, no effective pollution control or improvement measures have been implemented.
- He remarked that if the officials visited their village, they would understand the extent of dust pollution affecting the residents. He further stated that the transportation of mineral loads by Lorries is not properly regulated and that agricultural activities have been severely affected.
- He stated that dust generated from quarry operations has caused serious inconvenience to road users. He requested that no further quarry projects be permitted until the existing projects are completed.
- He alleged that the authorities had accepted bribes and failed to enforce the conditions stipulated in the project's Environmental Impact Assessment (EIA) report. He further stated that, even when the public staged a road blockade following the recent accident, they were suppressed by the police authorities. He requested that all the conditions stipulated for the project be strictly enforced and implemented.

**5. Thiru Dinesh, Thollamur Village**

- He stated that when he asked the women from Thollamur Village who had attended the meeting about the purpose of their participation, they were unaware of the reason for attending. He further stated that he had informed them that this public hearing was the appropriate forum to raise complaints regarding dust pollution and the difficulties faced by the villagers.

- He stated that following the death of Mr. Rajkumar, it had been demanded that no lorry movement should be permitted between 8.00 a.m - 9.00 a.m to ensure the safety of school-going children. However, he stated that this arrangement was not implemented even for one week.
- He stated that he had no objection to granting permission for new projects, provided that the road stretch from Thollamur to Pudhukuppam remained free from dust and that lorry traffic was properly regulated. He specifically mentioned that only **M/s. ASK** had properly maintained a certain stretch of the road. He further stated that the dust pollution has resulted in several health issues among the villagers.
- He stated that although Thollamur Village would be directly affected by the project, no assistance had been extended to the village. Instead, a sum of **Rs.1,00,000** had been donated to a school at Ranganathapuram, which is not directly related to the project. He reiterated that many of the women present at the meeting were unaware of the purpose of their participation.

**6. Thiru Ajeesh Raj, Thollamur Village**

- He stated that no proper public notice regarding the conduct of the public hearing had been issued among the educated residents of the village.
- In response, the District Environmental Engineer, Villupuram, requested the Project Consultant to display, through video presentation, the photographs showing the public notice issued for the hearing.
- After viewing the presentation, he stated that the locations shown in the photographs did not belong to Thollamur Village.
- The Project Consultant clarified that since the proposed project is located in Kondalangkuppam Village, the notification had been displayed in Kondalangkuppam Village, and the corresponding photographs were shown in the presentation.
- He further stated that although the project is located in Kondalangkuppam Village, Thollamur Village would be more significantly affected. He remarked that if proper notice had been issued in Thollamur Village, a greater number of educated youth would have participated in the public hearing.
- He also stated that the meeting was attended mainly by elderly people and that there was very little participation by the youth. He further requested that the lorry movement be properly regulated and that the roads be cleaned on a daily basis.

**7. Thiru M. Muthusamy, Kondalangkuppam Village**

- He stated that as the proposed project is located at a reasonable distance from the residential area, it is not expected to cause any adverse impact on the public. He therefore expressed his support for the project and requested that the necessary environmental clearances be granted.

**8. Thiru Minnal Sekar, Ward Councillor, Thollamur Village**

- He stated that the proposed project would not cause any adverse impact on the public and requested that the necessary approvals be granted at the earliest. He expressed his support for the project.

**9. Thiru Ajith, Thollamur Village**

- He stated that mineral resources have become an essential requirement in the present day and that the proposed project would not adversely affect the public. He stated that, subject to strict compliance with the stipulated environmental conditions, the project may be granted approval. He expressed his support for the project.

Finally, the District Environmental Engineer, Villupuram, stated that nine persons had expressed their views regarding the proposed project during the public hearing. Of these, six persons had expressed their support for the project, while three persons had expressed their opposition.

At that point, Mr. Dinesh of Thollamur Village intervened and clarified that they were not opposed to the project. He stated that they welcomed the project, provided that it was permitted subject to appropriate safeguards and conditions and that the developmental needs of their village were adequately addressed.

The District Environmental Engineer, Villupuram, further informed that all the views, suggestions, and objections expressed by the public during the hearing had been compiled and videographed and would be forwarded to the State Environment Impact Assessment Authority (SEIAA). He also stated that all the written representations received from the public would be enclosed and forwarded along with the proceedings.

**The following 33 members of the public have expressed their opinion in writing are as:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. K. Srinivasan<br>President,<br>Pasumai Virutcham Seva Sangam,<br>Registration No. 26/2026,<br>Villupuram – 605602. | They have submitted their written representations expressing their support for the proposed project. |
| 2. | Mr. Kumar<br>Pasumai Virutcham Seva Sangam,<br>Registration No. 26/2026,<br>Villupuram – 605602. | |
| 3. | Mr. D. Padmanaban<br>President,<br>M/s. Sutrusoozhal maasukattupadu eyakam,<br>No. 10/1, Pachaiyappan Street,<br>M.G.R. Nagar,<br>Chennai – 600078. | |
| 4. | Mr. E. Naresh<br>President,<br>M/s. Teji Environmental Society,<br>Registration No. 165/2026,<br>Thallagada,<br>Nalgonda, Telangana – 508207. | |
| 5. | Mr. S. Angaiah<br>President,<br>M/s. Satyavedu Constituency "SEZ" Farmers Association & AG Labors Protection & Development Association,<br>Nellore, Andhra Pradesh. | |
| 6. | Mr. S. K. Aslam<br>President,<br>M/s. Ushodaya Rural Development Environment Society,<br>Vijayawada, Andhra Pradesh. | |
| 7. | Mr. S. K. Karimulla<br>President,<br>M/s. Save Green Save Environment India,<br>Ibrahimpatnam, Andhra Pradesh. | |
| 8. | Ms. Karooru Sunitha<br>President,<br>M/s. Environment Rural Development Society,<br>Palakapuram, Andhra Pradesh. | |

| | | |
|---|---|---|
| **9.** | Mr. Arinathaboopathi<br>Kondalangkuppam Village,<br>Villupuram District. | |
| **10.** | Mr. M. Sudhakar<br>NGO, Vellore. | |
| **11.** | Mr. M. Munusamy<br>Kondalangkuppam Village. | |
| **12.** | Mr. S. Rajendran<br>Erayur Village,<br>Villupuram District. | |
| **13.** | Mr. J. Jayaraman<br>Erayur Village,<br>Villupuram District. | |
| **14.** | Mr. P. Manibalan<br>Perumbakkam Village,<br>Villupuram District. | |
| **15.** | Mr. L. Ramani<br>Adhanapattu Village,<br>Villupuram District. | |
| **16.** | Ms. M. Vijayalakshmi<br>NGO, Coimbatore. | |
| **17.** | Mr. N. Rajeswar<br>M/s. Abhishekthuni Ministries. | |
| **18.** | Mr. V. Venkateshwar<br>M/s. Abhishekthuni Ministries. | |
| **19.** | Ms. K. Sunitha<br>M/s. Abhishekthuni Ministries. | |
| **20.** | Mr. Umamaheswara Rao<br>Kadapa, Andhra Pradesh. | |
| **21.** | Mr. S. Sridhar<br>Santhaipudhukuppam, Puducherry. | |
| **22.** | Mr. K. Dinesh<br>Thollamur Village,<br>Villupuram District. | |
| **23.** | Mr. B. Balraj<br>Thollamur Village,<br>Villupuram District. | |
| **24.** | Mr. K. Adhishraj<br>Thollamur Village,<br>Villupuram District. | |
| **25.** | Mr. M. Parthiban<br>Thollamur Village,<br>Villupuram District. | |
| **26.** | Mrs. Lakshmi<br>Kondalangkuppam Village,<br>Villupuram District. | |
| **27.** | Mr. Ranjith<br>Kondalangkuppam Village,<br>Villupuram District. | |

| | | |
|---|---|---|
| **28.** | Mr. Ravi<br>Kondalangkuppam Village,<br>Villupuram District. | |
| **29.** | Mr. P. Subba Ramaiah<br>NGO. | |
| **30.** | Mr. N. V. Subba Var<br>NGO, Rajahmundry. | |
| **31.** | Mr. Kumar<br>Volunteer,<br>Villupuram. | |
| **32.** | Mr. M. Sivanathan<br>Volunteer,<br>Villupuram. | |
| **33.** | Mr. R. Ajith<br>Thollamur Village,<br>Villupuram District. | |

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Vanur Panchayat Union office, Vanur Taluk office, Kondalangkuppam Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Villupuram**

**Revenue Divisional officer,**
**Villupuram**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 10.06.2026 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 15 & 117 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 33 Nos.

**விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொண்டலாங்குப்பம் கிராமம், சர்வே. எண் 101/2 ல் 1.76.0 ஹெக்டேர் பரப்பளவில் திருமதி. தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மாநில அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 21.07.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

**திட்டத்தின் பெயர்:** விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொண்டலாங்குப்பம் கிராமம், சர்வே. எண் 101/2ல் 1.76.0 ஹெக்டேர் பரப்பளவில் திருமதி. தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி நிறுவப்படவுள்ளது.

**இடம்:** தி/ள். தனலட்சுமி மஹால், பெரும்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில், பாண்டி – மயிலம் ரோடு, கரசானூர் கிராம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் – 604 304.

**நாள் மற்றும் நேரம் :** 21/07/2026 - காலை 11.30 மணி

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.க. ஏகாம்பரம், | வருவாய் கோட்டாட்சியர்,<br>விழுப்புரம். |
| 2. | பொறி. இரா. இரங்க ராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 4. | திருமதி. மு. சங்கவி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

| | | |
|---|---|---|
| 5. | திரு. வ. கதிர்வேல் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. நா. தினேஷ் பாபு | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 7. | திரு. ம. சடகோபன் | தட்டச்சர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 8. | திருமதி. தி. ஜெயபிரபா | உரிமையாளர்,<br>தி/ள் தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி,<br>கொண்டலாங்குப்பம் கிராமம். |
| 9. | திரு. P. கோபிநாத் | தி/ள் எகோடெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட்,<br>சென்னை. |
| 10. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (117 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் விழுப்புரம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், எறையூர் கிராமம், திருமதி. தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி, சர்வே. எண் 101/2ல் 1.76.0 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 12.12.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம்

கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, திருமதி. தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கரசானூர் கிராமம், பெரும்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில், பாண்டி – மயிலம் ரோட்டில் அமைந்துள்ள தி/ள். தனலட்சுமி மஹாலில் 21.07.2026 அன்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் என்று "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினமலர்" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 10.06.2026 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் திருமதி. தி. ஜெயபிரபா சாதாரண மண் குவாரி நிறுவனத்தின் EIA Consultant, தி/ள் எகோடெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு. P. கோபிநாத் (EIA Consultant), தி/ள் எகோடெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என

குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1, திரு. சௌரிராஜன், கடகம்பட்டு கிராமம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவது குறித்து தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கூறி தனது ஆரதவை தெரிவித்தார்.

**2. திரு. கரிநாதபூபதி, கொண்டலாங்குப்பம் கிராமம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவது குறித்து தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கூறி தனது ஆரதவை தெரிவித்தார்.

**3. திரு. செந்தில் குமார், சந்தை புதுக்குப்பம் கிராமம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவது குறித்து தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கூறி தனது ஆரதவை தெரிவித்தார்.

**4. திரு. பார்த்திபன், தொள்ளமூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், இந்த குவாரிக்கான கருத்துக் கேட்பு கூட்டம் குறித்த தகவல் தான் அறியவில்லை என்றும், இங்கு பங்கேற்றுள்ள தொள்ளமூர் கிராமத்தை சேர்ந்த மகளிரிடம் எங்கு செல்கிறீர்கள் என்று நான் கேட்ட போது அவர்களுக்கு எதற்காக வந்துள்ளார்கள் என்று கூட தெரியவில்லை என்பதனை குறிப்பிட்டார்.
- சமூக ஆர்வலர்கள், படித்த இளைஞர்கள் யாரும் இந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று குறிப்பிட்டார். தொள்ளமூர் கிராமம் வழியாக தினசரி சுமார் 1000 லாரிகள் செல்கின்றது ஆனால் எவ்வித மாசு கட்டுப்பாடு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை.
- பல்வேறு குவாரிகளுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுகின்றது நாங்களும் எங்கள் கருத்துக்களை தெரிவிக்கின்றோம் ஆனால் எவ்வித மாசு கட்டுப்பாடு முன்னேற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார்.
- ஒரு முறை நீங்கள் எங்கள் கிராமத்தின் வழியாக சென்று பார்த்தால் எவ்வளவு தூசுக்கள் தங்கள் மீது படிகிறது என்பதனை அறியலாம். லாரிகளில் ஏற்றி செல்லப்படும் லோடுகள் முறைப்படுத்தப்படவில்லை. விவசாயம் முற்றிலுமாக அழிக்கப்படுகிறது.

- இந்த குவாரிகளினால் ஏற்படும் தூசுக்களால் போக்குவரத்து மிகவும் இடையூறாக உள்ளது. நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் மென்மேலும் புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்காமல் தற்போது செயலில் உள்ள திட்டங்கள் முடிவடைந்த பிறகாவது அனுமதி வழங்கலாமே என கூறினார்.
- அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக்கொண்டு திட்டத்தின் விளக்க உரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முறைப்படுத்தவில்லை என்று தெரிவித்தார். சமீபத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து நாங்கள் சாலை மறியலில் ஈடுபட்ட போது கூட நாங்கள் காவல் துறையினரால் ஒடுக்கப்பட்டோம் என்று தெரிவித்து, திட்டம் சார்ந்த நிபந்தனைகளை முறைப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>5. திரு. தினேஷ், தொள்ளமூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், இங்கு பங்கேற்றுள்ள தொள்ளமூர் கிராமத்தை சேர்ந்த மகளிரிடம் எங்கு செல்கிறீர்கள் எதற்கான வந்துளளீர்கள் என்று நான் கேட்ட போது அவர்களுக்கு எதற்காக வந்துள்ளார்கள் என்று கூட தெரியவில்லை என்பதனை குறிப்பிட்டார். ஊரில் புழுதி பறக்கிறது வேலைக்கு செல்ல முடியவில்லை என்பது குறித்து புகார் தெரியுங்கள் என கூறுகிறீர்களே அதை இங்கு தெரிவிக்க தான் இந்த கூட்டம் நடைபெறுகிறது நான் அவர்களிடம் கூறினேன்.
- காலை 8 மணி 9 மணி வரை குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் போது எவ்வித லாரி போக்குவரத்தும் இருக்க கூடாது என்று முந்தைய ராஜ்குமார் இறப்பின் போது வைத்த கோரிக்கை ஒரு வார காலம் கூட நடைமுறையில் இல்லை என்று தெரிவித்தார்.
- நீங்கள் புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கலாம் அதைப்பற்றி எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை ஆனால தொள்ளமூர் முதல் புதுக்குப்பம் வரை உள்ள சாலை எவ்வித தூசும் இன்றி இருக்க வேண்டும். லாரிகள் போக்குவரத்து சீரமைக்கப்பட வேண்டும். தி/ள் ASK நிறுவனம் மட்டும் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு சாலையை முறையாக சீரமைத்து வருகிறது என்று குறிப்பிட்டார். எங்களுக்கு இந்த தூசினால் பல்வேறு சுகாதார பாதிப்பு ஏற்படுகிறது.
- இந்த திட்டத்தினால் பாதிக்கப்படும் தொள்ளமூர் கிராமத்திற்கு எவ்வித உதவியும் செய்யாமல் திட்டத்திற்கு தொடர்பில்லாத ரங்கநாதபுரம் பள்ளிக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இங்கு வருகைபுரிந்துள்ள மகளிரில் எவரேனும்

ஒருவரை எழுப்பி தாங்கள் எதற்காக இங்கு வருகை புரிந்துள்ளீர்கள் என்று கேட்டுப் பாருங்கள் அவர்களுக்கு தெரியாது என்று கூறினார்.

**6. திரு. அஜீஷ்ராஜ், தொள்ளமூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், இந்த திட்டத்திற்கான கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவது குறித்து எவ்வித அறிவிப்பும் படித்த மக்களிடையே வழங்கப்படவில்லை என்று கூறினார்.

இதற்கு **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள்** திட்ட ஆலோசகர் அவர்களை அறிவிப்பு மேற்கொண்டதற்கான புகைப்படத்தினை காணொளி காட்சியில் காட்சி படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

- அதனை தொடர்ந்து இவர் காட்சிபடுத்தப்பட்ட இடங்கள் தொள்ளமூர் கிராமத்தை சேர்ந்தவை அல்ல என்று கூறினார். அதற்கு திட்ட ஆலோசகர் திட்டம் கொண்டலாங்குப்பம் கிராமத்தில் அமைய உள்ளதால், கொண்டலாங்குப்பம் கிராமத்தில் அறிவிப்பு மேற்கொள்ளப்பட்ட புகைப்படம் காணொளி படுத்தப்பட்டுள்ளது என்று பதில் அளித்தார்.
- அதனை தொடர்ந்து இவர் தொள்ளமூர் கிராமத்திற்கு தான் இந்த திட்டத்தினால் பாதிப்பு அதிகம் என்று கூறினார். தொள்ளமூர் கிராமத்திற்கு அறிவிப்பு விடுக்கப்பட்டு இருந்தால் கூட்டத்தில் இளைஞர்கள் பங்கேற்பு அதிகம் இருந்து இருக்கலாம் என்று தெரிவித்தார்.
- வயதானவர்களை வைத்து இந்த கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுகிறது இளைஞர்கள் பங்கேற்பு இல்லை என்று கூறினார். மேலும் சாலையில் லாரிகள் போக்குவரத்து முறையாக இல்லை என்றும் கூறினார். சாலைகளை தினந்தோறும் சுத்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

**7. திரு. எம் . முத்துசாமி, கொண்டலாங்குப்பம் கிராமம்,**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் குடியிருப்பு பகுதியில் இருந்து சற்று தொலையில் இருப்பதனால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என்று நாங்கள் நம்புகிறோம் எனவே இந்த திட்டத்திற்கு சுற்றுச்சூழல் ரீதியான அனுமதிகளை வழங்கலாம் என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

**8. திரு. மின்னல் சேகர், தொள்ளமூர் கிராம கவுன்சிலர்,**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை எனவே நீங்கள் விரைந்து அனுமதி வழங்கலாம் என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

**9. திரு. அஜித், தொள்ளமூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், **கனிம வளம் அத்தியாவசிய தேவையாக மாறி விட்ட இக்கால கட்டத்தில்** இந்த திட்டம் அமைவதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களை செயல்பட்டால் விரைந்து அனுமதி வழங்கலாம் என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் இந்த திட்டம் தொடர்பாக 9 நபர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து உள்ளனர் என்று கூறினார். அதில் 6 நபர்கள் ஆதரவாகவும் 3 நபர்கள் எதிராகவும் கூறி உள்ளனர்கள் என்று கூறிய போது **திரு. தினேஷ், தொள்ளமூர் கிராமம் அவர்கள்** குறுக்கிட்டு நாங்கள் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுடன் திட்டத்திற்கு அனுமதி வழங்கி எங்களுக்கு கிராமத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்தால் நாங்கள் இந்த திட்டத்தை வரவேற்பதாக குறிப்பிட்டார். மேலும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தர். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

**கீழ்க்கண்ட எழுபத்து ஒன்பது பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. கே. சீனிவாசன்,<br>தலைவர்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 26/2026<br>விழுப்புரம்/ 605602. | இவர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் ஆதரவினை தெரிவித்து உள்ளார்கள். |
| 2. | திரு. குமார்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 26/2026<br>விழுப்புரம்/ 605602. | |
| 3. | திரு. D. பத்பநாபன்,<br>தலைவர்,<br>சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு இயக்கம்,<br>எண். 10/1 பச்சையப்பன் தெரு, எம். ஜி. ஆர் நகர், சென்னை - 600078. | |
| 4. | திரு. E. நரேஷ் தலைவர்,<br>தி/ள் தேஜீ எண்விரோன்மெண்டல் சொசைட்டி,<br>பதிவு எண். 165/2026,<br>தள்ளகடா,<br>நல்கொண்டா, தெலுங்கானா- 508207. | |
| 5. | திரு. S. அங்கையா, தலைவர்,<br>தி/ள் சத்யவீடு காண்ஸ்டியூயன்சி "SEZ" பார்மர்ஸ் அசோசியேஷன் & ஏ. ஜி. லேபர்ஸ் புரோடெக்ஷன் & டெவலப்மண்ட் அசோசியேஷன்,<br>நெல்லூர், ஆந்திர பிரதேசம். | |
| 6. | திரு. S. K. அஸ்லாம்,<br>தலைவர்,<br>தி/ள் உஷோதயா ரூரல் டெவலப்மெண்ட் எண்விரோன்மெண்ட் சொசைட்டி,<br>விஜயவாடா, ஆந்திர பிரதேசம். | |
| 7. | திரு. S. K. கரிமுல்லா,<br>தலைவர்,<br>தி/ள் சேவ் கிரீன் சேவ் எண்விரோன்மெண்ட் இந்தியா,<br>இப்ராஹிம்பட்டணம், ஆந்திர பிரதேசம். | |
| 8. | திரு. கரூரூ சுனிதா,<br>தலைவர்,<br>தி/ள் எண்விரோன்மெண்ட் ரூரல் டெவலப்மெண்ட் சொசைட்டி,<br>பாலகாபுரம், ஆந்திர பிரதேசம். | |

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 9. | திரு. அரிநாதபூபதி,<br>கொண்டலாங்குப்பம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | இவர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் ஆதரவினை தெரிவித்து உள்ளார்கள். |
| 10. | திரு. எம். சுதாகர்,<br>என்.ஜி.வோ. வேலூர். | |
| 11. | திரு. எம். முனுசாமி,<br>கொண்டலாங்குப்பம் கிராமம். | |
| 12. | திரு. எஸ். ராஜேந்திரன்,<br>எறையூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 13. | திரு. ஜெ. ஜெயராமன்,<br>எறையூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 14. | திரு.பி. மணிபாலன்,<br>பெரும்பாக்கம் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 15. | திரு. எல். ரமணி.<br>ஆதனப்பட்டு கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 16. | திரு. எம். விஜயலட்சுமி,<br>என்.ஜி.வோ. கோயம்புத்தூர். | |
| 17. | திரு. என்.ராஜேஸ்வர்,<br>தி/ள் அபிஷேக்துணி மினிஸ்டரீஸ். | |
| 18. | திரு.வி. வெங்கடேஷ்வர்,<br>தி/ள் அபிஷேக்துணி மினிஸ்டரீஸ். | |
| 19. | திரு.கே. சுனிதா,<br>தி/ள் அபிஷேக்துணி மினிஸ்டரீஸ். | |
| 20. | திரு. உமாமகேஷ்வர ராவ்,<br>கடப்பா, ஆந்திர பிரதேசம். | |
| 21. | திரு. எஸ். ஸ்ரீதர்,<br>சந்தைப் புதுக் குப்பம்,புதுவை. | |
| 22. | திரு. கே. தினேஷ்,<br>தொள்ளமூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 23. | திரு. B. பால்ராஜ்,<br>தொள்ளமூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 24. | திரு.கு. அதிஷ்ராஜ்,<br>தொள்ளமூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 25. | திரு. மு. பார்த்திபன்,<br>தொள்ளமூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம். | |
| 26. | திருமதி. லட்சுமி,<br>கொண்டலாங்குப்பம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 27. | திரு. ரஞ்சித்,<br>கொண்டலாங்குப்பம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் மற்றும் ஊர்</th><th>கருத்து</th></tr>
<tr><td>28.</td><td>திரு. ரவி,<br>கொண்டலாங்குப்பம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம்.</td><td rowspan="6">வர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் ஆதரவினை தெரிவித்து உள்ளார்கள்.</td></tr>
<tr><td>29.</td><td>திரு. பி. சுப்பா ராமைய்யா,<br>என்.ஜி.வோ.</td></tr>
<tr><td>30.</td><td>திரு. என்.வி. சுப்பா வார்,<br>என்.ஜி.வோ, ராஜமுந்திரி.</td></tr>
<tr><td>31.</td><td>திரு. குமார், தன்னார்வலர்,<br>விழுப்புரம்.</td></tr>
<tr><td>32.</td><td>திரு. எம். சிவநாதன், தன்னார்வலர்,<br>விழுப்புரம்.</td></tr>
<tr><td>33.</td><td>திரு.R. அஜித்,<br>தொள்ளமூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம்.</td></tr>
</table>

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், வானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வானூர் தாலுகா அலுவலகம், கொண்டலாங்குப்பம் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC, மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அரசு அலுவலகங்களுக்கு நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

இறுதியாக, வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் அவர்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நிறைவடைந்ததாக அறிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

வருவாய் கோட்டாட்சியர்,
விழுப்புரம்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 10.06.2026).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (15 பக்கங்கள் 117 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (ஆங்கிலம்) மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 33 மனுக்கள்.